<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.</u>

**Crl.M.P.1457/2025 Date: 09.07.2026**

**PW 1 : திருமதி.மணிமேகலை க/பெ. மணிகண்டன்**

துவக்க நேரம் 03.18 A.N

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) என்னுடைய அப்பா பெயர் என்னவென்றால் ராஜேந்திரன் ஆகும். எனது அம்மாவின் பெயர் என்னவென்றால் செல்வி. எங்களது வீட்டில் நாங்கள் பெண்கள் இரண்டுபேரும், ஆண் ஒருவரும் உள்ளோமா என்றால் ஆமாம். எந்த தேதியில் எனக்கு திருமணம் நடந்தது என்றால் 2015 ம் வருடம் நடந்தது. நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.Sc.,B.Ed. படித்துள்ளேன்.

2) தற்பொழுது நான், வேலைக்கு சென்று வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல, நான் வேலைக்கு செல்லவில்லை. நான், தற்பொழுது தேவியாக்குறிச்சி தாகூர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிக்கு வேலைக்கு சென்று மாதம் ரூ.20,000/- சம்பளமாக பெற்று வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல, நான் வேலைக்கு செல்லவில்லை.

3) நான், எதிர்மனுதாரரை கொடுமைபடுத்துவதாக சொல்லி எதிர்மனுதாரர், எனக்கெதிராக விவாகரத்து வழக்கு தாக்கல் செய்து, அந்த வழக்கு ஆத்துார், சார்பு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். அந்த விவாகரத்து வழக்கு கடந்த 19.08.2024 அன்று பதிவு செய்யப்பட்ட வழக்கு என்று சொன்னால் சரிதான். மேற்படி விவாகரத்து வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள பதில், தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம்தானா என்றால் ஆமாம்.

4) மேற்படி வழக்கில் என் தரப்பில் 12.09.2025 ம் தேதியில் பதில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். மேற்படி விவாகரத்து வழக்கினை எதிர்மனுதாரர் தாக்கல் செய்த ஒரு ஆண்டிற்கு பின்பு, அவரை பழிவாங்கவேண்டி நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று

சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் சொல்லியுள்ள எந்த விவரங்களையும், நான், மேற்படி விவாகரத்து வழக்கில் சொல்லவில்லை என்றும், வழக்கிற்காக வேண்டி, இவ்வழக்கில் நான் பொய்யான சங்கதிகளை சொல்லி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல, நான் சொல்லியுள் அனைத்தும் உண்மை.

5) இவ்வழக்கினை தாக்கல் செய்வதற்கு முன்பு நான், சமூகநல துறையில் ஒரு மனு கொடுத்து, அதன் பேரில் அவர்கள்தான் இந்நீதிமன்றத்தில் வழக்கு போட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல, சமூகநல துறைக்கு நான் செல்லவே இல்லை.

6) என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்துள்ள சொத்து கடப்பாடு பட்டியலில் ஓட்டுனர் சம்பளம் என்று யாருடைய சம்பளத்தை குறிப்பிட்டுள்ளேன் என்றால் அவ்வாறு நான் எதுவும் குறிப்பிடவில்லை, தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன ஆவணத்தில், வீட்டு வாடகை என்பதும் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை, எனக்கு வீட்டு வாடகை செலுத்தவேண்டும் என்றுதான் அதில் சொல்லியுள்ளேன்.

7) நான் தாக்கல் செய்துள்ள சொத்து கடப்பாடு ஆவணத்தில், தவறான பெண்ணுடன் தங்கியிருப்பதாக சொல்லியுள்ளது யாரை குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு எதுவும் நான் குறிப்பிடவில்லை. எதிர்மனுதாரர் என்ன படித்துள்ளார் என்றால் M.Sc.,B.Ed படித்துள்ளார்.

8) நான், எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து எவ்வளவு நாட்கள் ஆகிறது என்றால் 3-1/2 வருடங்கள் ஆகிறது. எனது மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையாக இருந்திருந்தால், நான், எதிர்மனுதாரரைவிட்டு பிரிந்து சென்ற உடனேயே இந்த மனுவை தாக்கல் செய்திருந்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

9) நான் படிச்ச படிப்பிற்கு, தற்பொழுது நான் வேலைக்கு செல்வதற்கு யாரிடமும் கேட்கவேண்டிய அவசியம் எனக்கு இல்லை என்று சொன்னால்

சரியல்ல, எனது பெற்றோரிடம் கேட்பேன். நான், எனது பெற்றோரிடம் நான் வேலைக்கு செல்லலாமா என்று கேட்டுள்ளேனா என்றால் இல்லை. நான், எனது மனுவில் நான் வேலைக்கு செல்வதற்கு எதிர்மனுதாரர், எனக்கு அனுமதிக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான், எதிர்மனுதாரரிடம் வேலைக்கு செல்கிறேன் என்று கேட்டதாக இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல, எனது மருத்துவ செலவிற்கு எதிர்மனுதாரர் பணம் கொடுக்க மறுத்ததால் நான் வேலைக்கு செல்வதாக கேட்டபொழுது என் அப்பா, அம்மாவுடன் காட்டில் வேலை செய், இல்லையென்றால் உன் அப்பாவிடம் மருந்து வாங்கி சாப்பிட்டுக்கொள் என்று சொல்லிவிட்டு என்னை வேலைக்கு போக மறுத்துவிட்டார்.

10) நான், கள்ளக்குறிச்சி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எந்த காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் ஆத்தூர், காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். மேற்படி புகாரில், மணிகண்டன், என்னை வேலைக்கு செல்ல அனுமதிக்கவில்லை என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்சொன்னவாறு எதிர்மனுதாரர், என்னை வேலைக்கு அனுப்பவில்லை என்றிருந்தால் அது குறித்து ஆத்தூர், காவல் நிலையத்தில் கொடுத்த புகாரையோ, அதன் பேரில் வழங்கிய ஏற்பு சான்றிதழையோ இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல, நான் தாக்கல் செய்துள்ளேன்.

11) எதிர்மனுதாரருடன், நான் ஒன்றாக வாழ்ந்த காலத்தில் எதிர்மனுதாரர், என்னை வேலைக்கு போக அனுமதிக்கவில்லை என்று சொன்னது பொய் என்று சொன்னால் சரியல்ல. மணிகண்டன் பேரில் நிலம் உள்ளது என்பதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் ஒப்படைத்துள்ளேன்.

12) நான் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள எந்த ஆவணங்களிலும் எதிர்மனுதாரரின் பெயரில் இல்லை என்று சொன்னால் சரிதான். அதனால் அந்த நிலமானது எதிர்மனுதாரருக்கு சொந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல, நான், எதிர்மனுதாரருடன் ஒன்றாக வசித்து, எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து வந்த காலத்தில் நான் தாக்கல் செய்துள்ள நிலம் சம்மந்தமான ஆவணங்களில் உள்ள நிலமானது எதிர்மனுதாரர் பெயரில்தான் இருந்தது என்பதால் அந்த ஆவணங்களை இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ளேன்.

13) என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள பொன்னுசாமி படையாச்சி எனது தாத்தா, ராஜேந்திரன், எனது அப்பா என்று சொன்னால் சரிதான். எனது அப்பா பெயரில், வரகூர் கிராமத்தில் 4-1/2 ஏக்கர் நிலம் 556, 558 என்ற பட்டா எண்களில் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

14) எனக்கிருந்த குடல் அழுகல் நோய்க்கான சிகிச்சை மேற்கொள்ள என் அப்பா பெயரில் உள்ள, எனக்கு பிரியும் சொத்துக்களை விற்பனை செய்து சிகிச்சை எடுத்துக்கொள்ள எனது அப்பா சொன்னார் என்றாலும், அதற்கு நான் சொத்தை விற்கவேண்டாம் என்று மறுத்துவிட்டேன் என்றாலும் சரியல்ல, உடனடி மருத்துவ தேவைக்கு பணம் தேவைப்பட்டதால் சொத்தை உடனடியாக விற்க முடியாது என்பதால் அதனை மறுத்துவிட்டேன்.

15) கடந்த 2020ம் வருடம் எதிர்மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டு, நியூரோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாரா என்றால் ஆமாம். மேற்படி நியூரோ மருத்துவமனையில் எவ்வளவு பணம் செலவானது என்றால் ரூ.15 இலட்சம் செலவானது. அவ்வாறு அடிபட்டதில் எதிர்மனுதாரருக்கு என்ன நடந்தது என்றால் சுயநினைவு இன்றி இருந்தார்.

16) நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில், எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்தின் பேரில், அவருக்கு ஏற்பட்ட உடல்நலக்குறைவு அனைத்தும் சரியாகிவிட்டது என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

17) நான், எனது பிரமாண வாக்குமூலத்தில், எதிர்மனுதாரர், சிகிச்சை முடிந்து மருத்துவமனையிலிருந்து 3 மாதங்கள் கழித்து சுயநினைவின்றி வீட்டிற்கு வந்தார் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான், மூன்று மாதங்கள் கழித்து வீட்டிற்கு வரும்பொழுது அவருக்கு சுயநினைவு இருந்தது. எதிர்மனுதாரருக்கு காக்காவலிப்பு வந்துள்ளதா என்றால் ஆமாம். மேற்படி விபத்தின் காரணமாக எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட உடல்நலக்குறைவு இன்னும் சரியாகாத நிலையில் எதிர்மனுதாரர் இன்னும் வாழ்ந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல, அவர் சரியாகிவிட்டார்.

18) எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்தின் காரணமாக, எதிர்மனுதாரர் அவர் படித்த படிப்பிற்கு ஏற்ற வேலைக்கு செல்லமுடியாத நிலையிலும், போதிய வருமானமும் இன்றி தன்னைத்தானே பராமரித்துக்கொள்ள முடியாத நிலையில் வாழ்ந்து வருவதால் நான் இம்மனுவில் கேட்டுள்ள ஜீவனாம்சம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

19) குழந்தைகள் தற்பொழுது யாரிடம் உள்ளார்கள் என்றால் பெண் குழந்தை என்னிடம் உள்ளது, ஆண்குழந்தை அவரிடம் உள்ளது. எதிர்மனுதாரரிடம் ஆண்குழந்தை உள்ள நிலையில், ஏதோ அந்த ஆண் குழந்தை என்னிடம் உள்ளதாக சொல்லி அதிகப்படியான ஜீவனாம்சம் பெறுவதற்காக அவ்வாறு சொல்லி மனு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

20) எதிர்மனுதாரர், அவருடைய பெற்றோர் ஆதரவில்தான் வாழ்ந்து வருகிறார் என்றாலும், தன்னைத்தானே பராமரித்துக்கொள்ள முடியாத நிலையில் அவர்களுடன் இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. நான் நல்ல முறையில்தான் சம்பாதித்து வருகிறேன் என்றாலும், எதிர்மனுதாரர் எந்த வேலைக்கும் செல்லமுடியாத நிலையில், நான் எனதுமனுவில் கோரியுள்ள தொகை எதிர்மனுதாரரால் எனக்கு கொடுக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல, எனது மருத்துவ தேவைகளை எதிர்மனுதாரர்தான்

பூர்த்திசெய்யவேண்டும். எதிர்மனுதாரர் நோயாளியாக உள்ள நிலையில், அவருக்கெதிராக பொய்யாக சங்கதிகளை சொல்லி நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது.

முடிவு நேரம் 04.00 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.07.09 19:13:30 +0530

Judicial Magistrate No.2, Attur.